https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சோலை சுந்தர பெருமாள் புதினங்களில் சாதியப்பாகுபாடு

**பா. புஷ்பராணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் நா. சத்யா**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## ஆய்வுச் சுருக்கம்

*சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் முதலாளி வர்க்கத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டு இந்த சமுதாயத்தில் வாழ்கின்றார்கள் என்பதை இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. கீழ்ச்சாதி மக்களின் கடவுள் வேற்றுமைப்படுத்துதல், உடுத்தும் உடையில் பாகுபாடு, உண்ணும் உணவில் பாகுபாடு என்று கீழ்ச்சாதியினரை அடிமைப்படுத்தி அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி முதலாளித்துவம் வாழ்கிறது என்பதை இக்கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.*

## முன்னுரை

*இந்திய நாட்டில் சாதீயம் மிகவும் ஆழமாக பதிந்து மக்களை பல்வேறு பிரிவுகளாக வேறுபடுத்தி பிரித்து வைத்துள்ளது. இது உயர்வு தாழ்வு என்ற வேறுபாட்டையும் மேல்சாதி கீழ்ச்சாதி என்ற மனநிலையும் ஏற்படுத்தியுள்ளது. சாதியின் ரீதியாக சகமனிதனை இழிவுப்படுத்தி சுகம் காணும் மனோபாவம் காணமுடிகின்றது. இத்தகைய இழிவுநிலையை சோலை சுந்தரபெருமாள் புதினங்களில் வெளிப்படுத்துகின்றார். அத்தகைய சாதிய வேறுபாடுகள் வர்க்க முரண்கள் அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் அடிதட்டு மக்களின் அடங்கிப் போகும் மனநிலை போன்றவற்றை ஆராய்ந்து இக்கட்டுரை விளக்குகின்றது.*

## சாதி

*சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும் ஒன்றாகும். இக்குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு மாற இயலாது. ஒரு சாதியினர் வேற்றுச் சாதியினரை மணந்து கொள்ளுதலும் இயலாது. சாதி என்பது அகமான முறையைக் கொண்ட ஓர் அமைப்பாகும். குறிப்பிட்ட சாதியினர் மற்றச் சாதியினரிடமிருந்து பருகுவதற்கு நீரையோ உண்ணுவதற்கு உணவையோ பெற மாட்டார்கள். சமய நிகழ்ச்சிகளிலும் சடங்குமுறைகளிலும் இறைப்பணிகளிலும் இவ்வாறான வேறுபாடுகள் நிலவுகின்றன. மேல் சாதியினர் 'தூய்மை' 'தீட்டு' ஆகிய கோட்பாடுகளை தடுப்புச் சுவர்களாக ஏற்படுத்தியுள்ளார்கள்.*

***“சாதி முறை என்பது இந்தியச் சமுதாயத்தில் மட்டும் இன்றி உலக சமுதாயங்களிலும் காணப்படுகிறது என்பர்”[1]***

*மனித சமூகத்தில் உலக சம்பந்தமான அறிவு வளர்ந்துங்கூட மனிதப்பண்பு வளர்ந்து விட்டது என்று சொல்ல முடியவில்லை தீண்டாமை என்பது தொன்று தொட்டு நம் நாட்டில் வழிவழியாக வந்து கொண்டிருக் கும் நீங்காப் பணியாகும். சமூக வாழ்வில் எத்தனையோ கேடுகள் இருந்தாலும் அக் கேடுகளில் எல்லாம் தலையாயது தீண்டாமை என்னும் கொடுமையாகும்.*

***“தீண்டாமை என்பது மக்களின் ஒற்றுமையைக் கெடுக்கிறது. ‘ஒன்றே குலம்’ என்ற திருமூலர் திருவாக்கு ஒரே இனமான மக்களை உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் பிரித்து வைத்திருக்கும் வேற்றுமையைப் போக்க எழுந்ததே அச் சொல் தாழ்த்தப்பட்டோர் என்போரைத் தொடுவது தீட்டு என்பதே தீண்டாமையின் அடிப்படையாகும். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் தீண்டாமைக் கொடுமை யால் நம் நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மிக இழிவாக நடத்தப்பட்டு வருகின்றனர்.”[2]***

### சாதியின் தோற்றம்

*சோலை சுந்தர பெருமாள் புதினங்களில் இத்தகைய சாதிக் கொடுமைகளை வெளிப் படுத்துவதைக் காணமுடிகின்றது. உயர்சாதிக் காரர்கள் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிக் கூறும்போது நீசப்பயலுங்க, பள்ளுப் பறையனுங்க என்று சாதி பேரைச் சொல்லி அழைத்து தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள். முடிவெட்டுகிற இடத்தி லும், டீக்கடையிலும், பிணங்கள் கொண்டு செல்லும் வழிகள் பயன்படுத்துவதிலும் சமதையா நடத்தப்படவில்லை. வேலைக்கு ஏற்றது போல் கூலி கொடுப்பதும் இல்லை என்பதை சோலை சுந்தர பெருமாள் புதினங்களில் நாம் காணலாம்.*

*குடியானத் தெருக்காரவங்க காலம்காலமாக மக்களை தீண்டத்தகாதவங்களா வச்சிக்கிட்டு இருக்கிறத தடுத்து அவங்களுக்கு அடிமையா வச்சிக்காம இனஞ்செட்டுகள் தலையெடுத்து கேள்வி கேக்கிறதும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்ததும் குடியானத் தெருவில் உள்ளவங் களுக்கு தாங்கிக்க முடியல. நீங்க செய்ற வேலைக்கு நாங்க குடுக்குறது தான் கூலி அதை வாங்கிக்க வேண்டும். உங்கள் இஷ்டத்துக்கு கேக்குற கூலி குடுக்கமுடியாது என்று குடியானவர்கள் சாதியின் பெயரைச் சொல்லி மக்களை அடிமைப்படுத்துவதையும் நாம் சோலை சுந்தரபெருமாள் புதினங்களில் அறிந்துக்கொள்ளமுடிகிறது.*

### சாதியப்பாகுபாடு

***“முன்பு தொழில் வாரியான வகுப்புகள் இருந்தது. தொழில் மாறலாம். தீண்டாமை யில்லை. பாகுபாடு இல்லை பின் தொழிலை வாரிசு ரீதியாக செய்ய தொடங்கினர். பின் தொழிலின் அடிப்படையில் சாதி தோன்றி யது. அதன் தொடர்ச்சியாக தீண்டாமை உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டது என்பதை பல பதிவுகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது”[3]***

### சக்கிலியர்

*தாழ்த்தப்பட்ட சமூகத்தில் மிகவும் பின் தங்கியவர்களாக காணப்படுபவர் சக்கிலியர் என்னும் பிரிவைச் சார்ந்த மக்களாவர். சக்கிலியர் என்பவர் அருந்ததியார்கள் என்றும் கூறுவர்.*

***“சில ஊர்களில் ஆதிதிராவிடர்களால் அருந்ததியர் தாழ்வாக நடத்தப்பட்டதால் இவர்கள் தனி இயக்கம் கொண்டு போராடினர். அருந்ததி என்ற புராணக் கதையில் வரும் பெண்ணின் பெயரிலிருந்து அருந்ததியர் என்ற பெயர் வந்துள்ளது. அருந்ததி வசிஷ்ட்ட முனிவருக்கு சிறுவயதி லிருந்து தொண்டு செய்ததால் பருவமடைந் ததும் வசிஷ்ட்டர் அப்பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அருந்ததி யின் கற்பைப் பலவகையில் சோதனை செய்து பின்னர்தான் அவளைத் திருமணம் செய்துக்கொண்டார். அருந்ததி கற்புக்கரசி என விளங்கினார். அவரது வழிவந்தவர் களை அருந்ததியர் ஆவார். இவர்கள் சக்கிலியர் என்றும் அழைக்கப்பட்டனர். கிலி அல்லது பயம் என்ற பெயரில் சக்கிலி என்ற பெயர் நடைமுறைக்கு வந்துள்ளது. பாண்டிய***

நாட்டில் பிற மலைக்கள்ளர்களை ஒடுக்கிய மதுரைவீரனும், புலித்தேவனின் படைத் தளபதியாக இருந்து ஆங்கிலேயரை எதிர்த்த ஒண்டிவீரனும் சக்கிலியர். கட்டபொம்மன் படைகளிலிருந்து போர்புரிந்த முத்தன் பகடை, பொட்டிக்கடை, கந்தன்பகடை முதலியோர் சக்கிலியர்கள் ஆவர்”[4]

சக்கிலியரின் தொழில்

“கிணற்றுப் பாசனத்தைக் கொண்டிருந்த விவசாயத்திற்குத் தேவையான பரியை மூட்டித் தருவது போர் முனைகளுக்குத் தேவையான தோல்கருவிகளைத் தயாரிப்பது விவசாயப் பணிகளில் ஈடுபடுவது செருப்பு தைப்பது என பெரும்பாலும் தோல் பணியாளர்களாகவே அறியப்பட்ட இம் மக்கள் மின்சாரம் பம்புசெட் - பிளாஸ்டிக் ரப்பர் என உருவான மாற்றங்களால் தங்களது பாரம்பரியத் தோல் தொழிலை இழந்த தாழ்வான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இவர்களின் முக்கிய தொழில் துப்பரவுப் பணியாளர்கள், கழிவு அகற்றல் என்றபடியால் கிராமபுறங்களில் மற்ற தலித் பிரிவினராலேயே இவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள்”[5.]

அம்பலக்காரர்

அம்பலக்காரர் என்போர் தமிழத்தில் புதுக் கோட்டை, தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், சிவகங்கை, மதுரை, இராமநாதபுரம், பெரம்பலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் பரவி வாழும் ஒரு இனக்குழுவினராவர். இவர்கள் தமிழகத்தின் சமூகங்களில் ஒன்றான முத்தரையர் (முத்துராஜா) சமூகத்தின் ஒரு உட்பிரிவின ராவர். “அம்பலகாரர் என்பது கிராமங்களில் ஊர்த்தலைவர்களாக அம்பலகாரர்கள் இருந்து வருகிறார்கள். இவர்கள் தங்களது பெயருக்குப் பின்னால் “அம்பலம்” “அம்பலக்காரர்” அம்பலத்தார் என்ற வார்த்தையைப் பட்டமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சிலஇடங்களில் முக்குலத் தோர் மக்களும் அம்பலம் என அறியப் படுகின்றனர்”[6]

பறையர்;

பறையர்(அ) மறையர், சாம்பவர் என்பவர்கள் இந்தியாவின் ஒரு இன அல்லது சமூக குழுவினர், இவர்கள் அதிகமாக தமிழ்நாடு, கேரளா மற்றும் ஸ்ரீலங்கா நாட்டில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் மூன்று வெவ்வேறு பெயர்களில் இவர்கள் அழைக்கப்பட்டாலும் பறையர் என்று பொதுவாக அறியப்படுகின்றனர்.

“இச்சமூகக்குழுவானது பெயர் “பறை” என்பதிலிருந்து தோன்றியதாகும், பறை என்ற தமிழ் வார்த்தைக்கு சொல் என்ற பொருளாகும். மறை ஓதிய (பறைந்த)வர்கள் என்பதால் இப்பெயர் ஏற்பட்டது. பறையர்கள் வாழுகின்ற இடம் சேரி என்று அழைக்கப்படுகிறது”[7]

பள்ளர்:

“மள்ளர் அல்லது பள்ளர் எனப்படும் சமுதாயத்தினர் தமிழகத்தில் பள்ளர், வாய்காரர், காலாடி, மூப்பன், குடும்பன், பண்ணாடி, தேவேந்திரக் குலத்தான் எனும் வேறு சில பெயர்களில் அழைக்கப்படுகின் றனர். இவர்கள் தங்களை தேவேந்திரன் வழி வந்தவர்கள் என்கிறார்கள். எனவே தேவேந்திரகுலவேளாளர் என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார்கள்”[8]

வண்ணான்

வண்ணான் என்போர் இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் துணி சுத்திகரிக்கும் (சலவை செய்யும்) தொழிலை முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்ட ஒரு சாதியின் பெயரைக் குறிக்கும் சொல்லாகும்.

“வண்ணார் சமூகம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. அவை ஈரங்குலி வண்ணான், பாண்டிய வண்ணான், தொண்டைமான் வண்ணார் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்”[9]

சோலை சுந்தர பெருமாள் புதினங்களில் சக்கிலியர், அம்பலகாரர், பரையர், பள்ளர், மூப்பனார், வாண்டையார், உடையார், கிருஸ்துவ உடையார், வலக்காரர், ரெட்டி, நாடர், வண்ணான், கள்ளர், பிள்ளை, நாயக்கன், அய்யர் போன்ற சாதியினர்

இடம் பெயர்கின்றனர்.

### சாதிய சுரண்டல்

அப்போதைய தஞ்சாவூர் இந்திய அரிசி உற்பத்தியில் சுமார் 30 சதவீதத்தை கொடுத்து வந்தது. வளமான இப்பகுதியில் விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பல்வேறு வகைகளில் சுரண்டப்பட்டார்கள். அரசவைக்கும், கோயில்களுக்கும், விளைச்ச லில் பங்கு, இலவச உழைப்பு, காவல் வரி, தொழில் வரி(இறை) ஆகிய நிலவப்பட்டன.

வட்டி திரும்;ப செலுத்த முடியாதவர்கள், உரிய வரி செலுத்த முடியாதவர்களின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. நிலம், தானம், பெறப்பட்டது. இவையெல்லாம் நிலவுடமை ஏகபோகங்களை வளர்த்தன.

1799ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் ஆளுகையில் வந்தது. தஞ்சை, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு லாபவெறியே அடிப்படையாக இருந்தது. அவர்கள் பழைய நில உறவுகளின் ஒடுக்குமுறைகளை பயன் படுத்திக் கொண்டார்கள்.

இந்திய சமூகத்தின் துவக்க காலத்தில் சுரண்டலை நடத்தவும் அதனை பாதுகாக்கவுமே சாதியம் உருவாகியிருக்கு. இப்போ நாம் மண்ணுல சாதி அமைப்புக்கு எதிரான போராட்டம் செய்யப்படணுன்னா அது சுரண்டலுக்கு எதிரான போராட்டத் துடன் இணைச்சிதான் ஆகனும். சாதியத்துக்கு எதிரான போரட்டம் என்பது வெறும் மனித நேய உணர்வால் மட்டும் நடைபெறும். இயக்கமாகத்தான் முடியும். **“கோடிக்கனக்கான மக்களிடையே சாதி எதிர்ப்பு உணர்வையும் மனித நேயத்தையும் தட்டி எழுப்ப சமூக சீர்திருத்த இயக்கம் தேவைதான். ஆனா அது வெறும் சமூக சீர்திருத்த இயக்கமா நின்னுடக்கூடாது. சுரண்டலுக்கு எதிரான போராட்டத்துடன் சேத்து செய்யும்போதுதான் அது மனித இனத்துக்கான வெற்றியைக் கொடுக்கும்”**[10]

### முடிவுரை

சோலை சுந்தர பெருமாள் புதினங்களில் சாதியும் சாதியப்பட்ட போராட்டங்களும் கல்வியில் புதினங்கள் மூலம் காணப்படும். சக்கிலியர் பறையர், மூப்பனார், பள்ளர் அம்பலக்காரர் நாயக்கன், நாடார், வண்ணான் போன்ற சாதிகளை மையப் படுத்தி இக்கட்டுரையில் பயனிப்பதைக் காணப்படுகிறது.

சாதியத்திற்கு எதிராக அணித்திரள்வது. அது சாதியவாதிகளால் ஏற்கமுடியாமல் மக்களை துன்புறுத்துகின்றனர். ஆதிக்க மனநிலை கொண்ட மேல் சாதியினரின் வன்மங்களை மக்கள் மேல் காட்டப்பட்டன. ஒரு சாதியில பிறந்தவர் வேற்றுசாதியினரை மணந்து கொள்ளுதல் இயலாது. மேல் சாதியினத் தூய்மை, தீட்டு, ஆகிய கோட்பாடுகளை தடுப்பு சுவர்களாக காலம் காலமாகவே ஏற்படுத்தியுள்ளது.

### சான்றெண் விளக்கம்:

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப. 314
2. ஆனந்த நவீசாஸ்திரி. க.ஆ. சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகள், ப. 77
3. https;//wikipedia. org.
4. சீனிவாசன் .ப. தீண்டாமையைத் தீயிடு ப. 245
5. https;//wikipedia.org.
6. https;//wikipedia.org.
7. https;//wikipedia.org.
8. https;//wikipedia.org.
9. https;//wikipedia.org.
10. https;//wikipedia.org.

### துணைநூற் பட்டியல்

1. **ஆனந்த ரவிசாஸ்திரி. க. ஆ.- சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகள்,** பாவை பிரிண்டர்ஸ், முதல் பதிப்பு:2008, சென்னை.

2. **சீனிவாசன் ப. - தீண்டாமையைத் தீயிடு,** மங்கை பதிப்பகம், முதல் பதிப்பு : 2014 சிதம்பரம்.

3. **பக்தவச்சல பாரதி - பண்பாட்டு மானிடவியல்,** மெய்யப்பன் பதிப்பகம், முதல் பதிப்பு : 1990